MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group
Adding years of healthy life

NUH
National University Hospital
A member of the NUHS

Alexandra Health

EASTERN HEALTH ALLIANCE

JurongHealth

SingHealth

SINGHEALTH / PIL / T70R0

நோயாளி தகவல் கையேடு

# காது சொட்டு மருந்துகள்

நுண்ணுயிர்-எதிர்ப்பு சொட்டு மருந்துகள்
(Antibacterial Eardrops)

நுண்ணுயிர்-எதிர்ப்பு மற்றும் அழற்சி-எதிர்ப்பு சொட்டு மருந்துகள்
(Antibacterial & Anti-inflammatory Eardrops)

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

# இந்த மருந்துகள், காதுக் குழாயில் ஏற்படும் நுண்கிருமித் தொற்றுகளைக் குணப்படுத்தும் ஆன்டிபயோடிக்ஸ் (antibiotics) மருந்துகளைக் கொண்டிருக்கின்றன. சிலவற்றில், காது சிவத்தல், எரிச்சல் மற்றும் அசௌகரியம் போன்ற பாதிப்புகளைப் போக்கக்கூடிய கார்டிகோஸ்டெராய்ட்ஸ்களும் (corticosteroids) உள்ளன.

## மருந்தை நான் **எப்படி** பயன்படுத்த வேண்டும்?

- முதலில் கைகளைக் கழுவுங்கள். பாதிக்கப்பட்ட காது மேலே இருக்கும்படி படுத்துக் கொள்ளுங்கள், அல்லது தலையைச் சாய்த்துக் கொள்ளுங்கள்.
- பெரியவர்கள் என்றால், காது மடலை மேலாகவும் பின்புறமாகவும் இழுத்து காதுக் குழாயை நேராக ஆக்குங்கள். (பிள்ளைகள் என்றால், கீழாகவும் பின்புறமாகவும் இழுக்க வேண்டும்).
- மருத்துவர் கூறிய எண்ணிக்கையில் மருந்தை சொட்டு சொட்டாக காதினுள் விடுங்கள். மருந்துச் சாதனத்தின் (dropper) நுனி காதையோ வேறு பகுதியையோ தொடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.
- மருந்து காதினுள் நன்றாகச் செல்வதை உறுதி செய்ய, காதை சாய்த்தபடியே சில நிமிடங்களுக்கு வைத்திருங்கள் (அல்லது மருந்து ஒழுகாமலிருக்க காதில் பஞ்சு வைத்துக் கொள்ளலாம்).

நுண்ணுயிர் தொற்று முழுமையாக குணமடைவதற்கு, அறிகுறிகள் மறைந்துவிட்டாலும்கூட, மருந்தை முழுமையாகப் பயன்படுத்தி முடியுங்கள். நடுவில் நிறுத்த வேண்டாம். அதே சமயம், மருத்துவர் கூறிய நாட்களுக்குக் கூடுதலாகவும் மருந்தைப் பயன்படுத்தாதீர்கள்.

## மருந்து போட்டுக் கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஞாபகம் வந்தவுடன் போட்டுக் கொள்ளுங்கள். அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதல் வேளை மருந்தைப் போடாமல் விட்டுவிடுங்கள். ஏனெனில், நீங்கள் ஒரே நேரத்தில் 2 வேளை மருந்தை ஒன்றாகப் போட்டுக் கொள்ளக் கூடாது.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்

## இந்த மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

பின்வருபவை இருந்தால், மருத்துவரிடம் தெரிவியுங்கள்:

- மருந்து பயன்படுத்துவதற்கு முன்பு இல்லாத அரிப்பு, சிவந்து போதல் அல்லது வீக்கம், மருந்து பயன்படுத்திய பிறகு இருந்தால்.
- காதில் எரிச்சல் அல்லது கடுப்பு இருந்தால்.
- இந்த மருந்தினால் ஏற்பட்டிருக்கலாம் என்று நீங்கள் நினைக்கும் வேறு பாதிப்புகள் இருந்தால்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

பின்வருபவை இருந்தால், மருத்துவரிடம் தெரிவியுங்கள்:

- இந்த மருந்தில் சேர்க்கப்பட்டிருக்கும் பொருள் ஒன்றினால் இதற்கு முன்பு உங்களுக்கு ஒவ்வாமை ஏற்பட்டிருந்தால், அல்லது பதனப் பொருட்கள் (preservatives) அல்லது சாயங்கள் போன்றவற்றுக்கு ஒவ்வாமை இருந்தால்.
- செவிப் பறை (ear drum) இல்லாதிருந்தால், அல்லது அதில் ஓட்டை விழுந்திருந்தால்.
- நீங்கள் கர்ப்பவதி, தாய்ப்பால் கொடுப்பவர், அல்லது விரைவில் கர்ப்பம் தரிக்க வாய்ப்புள்ளவர் என்றால்.
- காதுப் பிரச்சினை 5 முதல் 7 நாட்களுக்குப் பிறகும் மேம்படவில்லை என்றால் , அல்லது அது மேலும் மோசமானால்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும் ?

மருந்தின்மீது நேரடி வெப்பம், வெளிச்சம் அல்லது ஈரம் படாதவாறு, பார்த்து கொள்ளுங்கள் அறை வெப்பநிலையில் இறுக்கமாக மூடி வைத்திருங்கள். திறந்த 4 வாரங்களுக்குப் பிறகு மருந்தை வீசிவிடுங்கள்.